**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**க.பொ.த உயதரப் மாதிரிப் பரீட்சை -2020**
**சித்திரக்கலை 11**

**மூன்று மணித்தியாலங்கள்**

**உப பகுதி 'அ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)**

1) **இலங்கையில் ஒவ்வொரு இராசதானி காலத்தில் உருவாக்கப்பட்ட புத்தசிலைகளில் அக்காலத் திற்குரிய பண்புகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது.**

(i) அநுராதபுரக்காலத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ள பிறநாட்டின் கலைமரபுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கல்விகாரை புத்தசிலைகளில் அவதானிக்கக்கூடிய மகாயான பௌத்த எண்ணக்கரு அம்சங்களை சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) மத்திய கால புத்தசிலைகளில் காணக்கூடிய விசேட பண்புகளை உதாரணத்துடன் விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

2) **18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஓவியக்கலைப் பாரம்பரியம் அப் பிரதேசத்திற்கு மட்டும் வரையறுக்கப்படாது தாழ்நிலப் பிரதேசங்களுக்கும் பரவியபோது அப்பாணி சிறு மாற்றங்களுக்கு உள்ளானது.**

(i) மலையக சித்திரங்களில் காணக்கூடிய தாவர வடிவங்கள் இரண்டு குறிப்பிடுக. ( 02 புள்ளிகள்)

(ii) இக்காலத்தில் மலைநாட்டு (உடரட்ட) சித்திர பாரம்பரியம் தாழ்நாட்டு பாரம்பரியத்திலிருந்து வேறுபடும் முறையைச் சுருக்கமாக விவரிக்க. (05 புள்ளிகள்)

(iii) கத்தலுவ பூர்வாராமய விகாரை ஓவியங்கள் பற்றி மதிப்பீடு ஒன்றை எழுதுக. (08 புள்ளிகள்)

3) **சிகிரிய ஓவியங்கள் படவாக்கற் கலையின் முதிர்ச்சி பெற்றவடிவமாக உலகப்புகழ் பெற்றி ருப்பதுடன் கி.மு 12 ஆம் நூற்றாண்டு வரை இம்மரபு பயன்படுத்தபட்டு வந்த தென்பதற்கும் சான்றுகள் உண்டு"**

(i) அநுராதபுரக்காலத்திற்குரிய பௌத்த சமய ஓவியங்கள் காணப்படும் இடங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) சிகிரிய பெண்ணோவியங்கள் காவிய சிறப்பை வெளிப்படுத்தும் விதத்தினை சுருக்கமாக விமர்சிக்குக. (05 புள்ளிகள்)

(iii) சிகிரிய ஓவியக்கலையின் சாயல் பொலன்னறுவைக் காலத்திலும் காணப்படுகின்ற போதிலும் கருதுகோள் ரீதியில் வேறுபடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இக்கூற்றினை திவங்காலய ஓவிய ங்களை உதாரணங்கள் காட்டி ஆராய்க. (08 புள்ளிகள்)

## உப பகுதி 'ஆ'
## (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4) சாஞ்சி, பாருத் வேலைப்படுகளை காட்டிலும் தரமான வேலைகளை அமராவதி வேலைப்பாட்டில் காணலாம்.**

(i) சாஞ்சி செதுக்கலில் காணப்படும் புத்தசரிதை செதுக்கல்கள் இரண்டு தருக (02 புள்ளிகள்)

(ii) மாயாதேவியின் கனவு என்ற புத்தசரிதையை பாருத், அமராவதி கலைஞர்கள் வெளிப்படுத்திய தன்மையை சுருக்கமாகத் தருக (05 புள்ளிகள்)

(iii) "நளகிரி" யானையை அடக்குதல் என்ற அமராவதி சிற்பத்தில் காணப்படும் சிற்ப முதிர்ச்சி தன்மையை விமர்சிக்குக (08 புள்ளிகள்)

**5) சிந்து நாகரிகம் விருத்தியடைந்த சமூகத் தொகுதியைக் கொண்டுள்ளது என்பதை கலைப் படைப்புக்கள் வெளிப்படுத்துகிறது.**

(i) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட கற்சிலைகள் இரண்டு தருக (02புள்ளிகள்)

(ii) சிந்து வெளி நகர நிர்மாணிப்பு முறை பற்றி சுருக்கமாக விமர்சிக்குக (05 புள்ளிகள்)

(iii) "கொம்புக் கடவுள்" என்ற முத்திரையின் அழகியல் பண்பு மற்றும் தத்துவ அம்சங்களை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

## உப பகுதி 'இ'
## (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6) கி.மு 3000 ஆண்டளவில் ஆரம்பித்த எகிப்தியக்கலை எகிப்தியருடைய அந்தரங்க வாழ்வின் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றது.**

(i) எகிப்திய பாரம்பரிய இயல்புகளை எடுத்துக்காட்டும் இரு சிலைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) எகிப்திய பாரம்பரியக் கலைப்பாங்கில் காணப்படும் நான்கு அடிப்படை இயல்புகளை எழுதுக, (05 புள்ளிகள்)

(iii) பாரம்பரிய கலை நிர்மாணிப்புக்களினுள்ளே கட்டுண்டு இருந்த எகிப்திய சிற்பிகள் பின்னர் அவற்றினின்றும் விடுபட்டு இயற்கைச் சிற்பங்களை ஆக்கத் தூண்டப்பட்டனர் எனத்தெரி கின்றது இரு உதாரணங்களைக் கொண்டு விமர்சிக்க. (08 புள்ளிகள்)

**7) ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால சிற்ப மரபுகளை நிராகரித்து பிற்காலத்தில் நவீன சிற்ப மரபு உதயமானது.**

(i) மறுமலர்ச்சிக்கால சிற்பங்கள் இரண்டின் பெயரினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) ஹென்றி மூரின் "சாய்ந்திருக்கும் பெண்" என்ற சிற்பத்தைச் சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) "கலேஸ் நகரத்து குடிமக்கள்" என்ற தொகுதிச் சிற்பத்தின் பண்புகளை விமர்சிக்குக. (08 புள்ளிகள்)